மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

**S.C No.12/2022**

2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 5-ஆம் தேதி வெள்ளிக்கிழமை

**Crmp 10/2023** மனு அனுமதிக்கப்பட்டு அ.சா1 மீண்டும் ஆஜராகி எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

அ.சா.1 (குமார்)

கு.வி (1 முதல் 4எதிரிகள் தரப்பில் )

சரவணா மருத்துவமனையில் நான் சிகிச்சையில் இருந்தபோது புகார் வாங்கியதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளென் என்றால் சரிதான். சரவணா மருத்துவமனையில் 11.12.2020 காலை 9 மணியில் தான் உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்ந்தேன் என்றால் சரிதான். 11.12.2020ம் தேதி காலை 9 மணிக்கு பிறகு சார்பு ஆய்வாளர் என்னிடம் புகார் மனு வாங்கியதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கின் முதல் தகவல் அறிக்கை 10.12.2020 இரவு 23.30க்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல, சம்பவம் நடந்த 1 மணிநேரத்திற்குள் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. புகார் மனு 11.12.2020 9 மணிக்கு பிறகு புகார் கொடுத்ததாக எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றும் ஆனால் முதல் தகவல் அறிக்கை 10.12.2020 இரவு 23.30 மணிக்கு பதிவுசெய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, புகார் கொடுத்தேன். அ.சா.ஆ1 புகார் மனு எனது கைபட எழுதவில்லை என்றால் சரிதான் எனது உறவினர் தர்மராஜ் நான் சொல்ல சொல்ல எழுதினார். எனது 161 வாக்குமூலத்திலும் முதல் விசாரணையிலும் புகார் மனுவை நான் சொல்ல சொல்ல தர்மராஜ் எழுதியதாக சொல்லவில்லை என்றால் சரிதான், நான் மறந்துவிடடேன். புகார் எழுதிய தர்மராஜை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் 10.12.2020 இரவு 8 மணி என்றால் சரிதான், இரவு 8 முதல் 8.30 மணி இருக்கும். T.வேலாங்குளத்திலிருந்து சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு எவ்வளவு துூரம் இருக்கம் என்றால் 15கி.மீ. சம்பவ நடந்த T.வேலாங்குளத்திலிருந்து சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு 108

ஆம்புலன்ஸ் மூலம் சென்றால் எவ்வளவு நேரம் ஆகும் என்றால் 20 முதல் 30 நிமிடம் ஆகும். சம்பவம் நடந்த நேரத்திலிருந்து 2.30மணி நேரம் தாமதமாக தான் மருத்துவமனை சென்றதாக விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், 108 ஆம்புலன்ஸ் வருவதற்கு காலதாமதம் ஆகிவிட்டது. 108 ஆம்புலன்ஸ் மூலமாக தான் சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் என்னை தாக்கிய நபர்களாக அடையாளம் தெரிந்த 5 நபர்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிகளின் பெயரை குறிப்பிட்டு விபத்து பதிவேட்டில் சொல்லவீல்லை என்றால் சரியல்ல, நான் பெயரை சொன்னேன். எதிரிகள் அனைவரும் எனது ஊரை சேர்ந்தவர்களா என்றால் சரிதான். வழக்கிற்கு முன்பே எதிரிகள் பெயர் தெரியும் என்றால் சரிதான். ஆனால் விபத்து பதிவெட்டில் எதிரிகள் பெயரை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் நான் மயக்கத்தில் இருந்ததால் பெயர்களை குறிப்பிட்டு சொல்ல இயலவில்லை. எனக்கு இருச்ககர வாகனம் ஓட்டதெரியும். இருசக்கர வாகனம் வைத்திருக்கிறேன். விபத்து பதிவெட்டில் நான் மருந்து அருந்தியதாக குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். நான் சம்பவத்தின் போது மது அருந்திவிட்டு இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்று கீழே விழுந்து ஏற்பட்ட சிறுகாயத்திற்கு எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சிகிச்சையில் இருந்த மதுரை சரவணா மருத்துவமனையில் 15.12.2020 அன்று வழங்கப்பட்ட காயச்சான்றிதழில் எனக்கு ஏற்பட்ட காயம் சிறுகாயம் என சான்று அளித்துள்ளனர் என்றால் சரியல்ல. சரவணா மருத்துவமனையில் 11.12.2020 முதல் 12.12.2020 தேதிவரை ஒரு நான் சிகிச்சையில் இருந்ததாக காயச்சான்றிதழில் உள்ளது என்றால் நான் 2 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். நான் சேர்ந்த சிவகங்கை அரசு மருத்துவமனையில் அனைத்து வகையான சிகிச்சைகளும் அளிக்கப்படும் என்றால் சரிதான். வழக்கில் தகாக்ல் செய்யப்பட்ட காயச்சான்றிதழில் சிறுகாயம் என குறிப்பிடப்பட்டுள்ளது எனவே மேல்சிகிச்சை பெறுவதற்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை எதுவும் மருத்துவரால் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. சிவகங்கை அரசு மருத்துவமனையிலிருந்து மதுரை அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக பரிந்துரை செய்ததற்கான ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. மதுரை அரசு மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு, எந்த தேதியில் உள்நோயாளியாக சிகிச்சையில் சேர்ந்தேன் என்றால் 11.12.2020, நேரம்

தெரியவில்லை. மதுரை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சை பெற்றதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். மதுரை அரசு மருத்துவமனையில் அனைத்து சிகிச்சைகளும் வழங்கப்படும் என்றால் சரிதான். மேற்படி அரசு மருத்துவமனையிலிருந்து சரவணா மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக சிபாரிசு செய்ததாக சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். அரசு மருத்துவமனையிலிருந்து சரவணா மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக சிபாரிசு செய்ததாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் 3 மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக எந்த மருத்துவ ஆவணங்களும் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் போலீசாரிடம் ஒப்படைத்துள்ளேன். பொதுவாக காயச்சான்று நான் சிகிச்சை பெற்ற ஆவணத்தின் அடிப்படையில் தான் வழங்கப்படும் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் காயச்சான்று மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிரிகளுக்கு எதிராக தனியார் மருத்துவமனையில் காயச்சான்று உற்பத்தி செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள சரவணா மருத்துவமனையில் பெற்ற காயச்சான்றிதழில் எதிரிகளின் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய குற்றச்சாட்டு புகாரில் 10.12.2020 தேதியிலிருந்து 1 மாதத்திற்கு முன்பாக சொத்து சம்பந்தமாக 1ம் எதிரிக்கும் எங்களுக்கும் பிரச்சனை உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 1மாதமாக பிரச்சனை உள்ளதை குறித்து போலீசில் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். வழக்கிற்காக போலீசார் கேட்டதற்கிணங்க நிலப்பிரச்சனை இருப்பதாக பொய்சொல்கிறேன் என்றால்சரியல்ல. புகாரிலும் முதல் விசாரணையிலும் T.வேலாங்குளம் கழுங்கு அருகே நிலப்பிரச்சனை உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி T.வேலாங்குளம் கழுங்கு அருகே எங்களுக்கு பாத்தியப்பட்ட நிலத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. அந்த இடத்திற்கு என் அப்பா பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். T.வேலாங்குளம் கழுங்கு இடத்திற்கு எனது பெயரிலோ எனது அப்பா பெயரிலோ பட்டா எதுவும் இல்லை என்றால் சரியல்ல. T.வேலாங்குளம் கழுங்கு அருகே உள்ள 1ம் எதிரிக்கு பாத்தியமான சொத்தின் படடா எண் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. T.வேலாங்குளம் கழுங்கு அருகே 1ம் எதிரிக்கு எந்த இடமும்

பாத்தியமாக இல்லை என்றால் சரியல்ல, இடம் உள்ளது. நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் 1 முதல் 4 எதிரிகள் அனைத்து எதிரிகளுக்குமிடையே இட்பிரச்சனை உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரி கருப்பசாமிக்கு தான் இடம் உள்ளது. மற்ற எதிரிகளுக்க இடம் இல்லை. அரசு தரப்பில் காட்டப்பட்ட வரைபடத்தில் எங்கள் வீட்டில் கழிப்பறை இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் 1ம்எதிரியின் இருசக்கர வாகனத்தை காணவில்லை அதனால் எதிரிகள் என்னிடம் பிரச்சனை செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வண்டியின் நம்பர் மற்றும் வண்டி காணாமல் போனது சம்பந்தமாக எந்த ஆவணமும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய அப்பாவை (அ.சா.2) 3ம் எதிரி போன் மூலம் மிரட்டியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். எத்தனை முறை போலீசார் விசாரித்தார்கள் என்றால் சம்பவ இடத்தில் வைத்து போலீசார் 1முறை விசாரித்தார்கள். சரவணா மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். பின்னர் நான் வீட்டில் இருக்கும் போது விசாரித்தார்கள். எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் 10.12.2020 சம்பவ இடத்திலும், 10.12.2020 சிவகங்கை அரசு மருத்துவமனையில் விசாரித்தார்கள். 11.12.2020 சரவணா மருத்துவமனையில் விசாரித்தார்கள். மேற்படி விபரங்கள் 161 வாக்கு மூலத்திலும் முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன். அரசு மருத்துவமனை சிவகங்கையில் விபத்து பதிவேட்டில் சம்பந்தபட்ட காவல்துறைக்கு 10.12.2020 அன்று இரவு 11.05க்கு பிறகு தகவல் தெரிவிக்கப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ நடந்ததாக சொல்லும் இடம் எனது வீட்டுக்கு சுமார் 500 அடி இருக்குமா ன்றால் சரியல்ல 300அடி இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லும் தாலிகுளம் கிராமத்திற்கு செல்லும் ரோடு ஆகும். பாதை வழியாக T.வேலங்குளத்திற்கும் தாலிகுளத்திற்கும் பொதுமக்கள் சென்றுவருவார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு இருபக்கமும் வேலிகருவேல காடுகள் உள்ளன மற்றும் சம்பவ நடந்த இடம் மாரநாடு கால்வாய் அருகே சுடுகாடு. டிசம்பர் மாதம் இரவு 8.30 மணி நன்றாக இருட்டாக இருக்கும் என்றால் சரிதான். போலீசார் நாங்கள் கொடுத்ததாக தாக்கல் செய்துள்ள மறுவிசாரணை 161 வாக்குமூலத்தில் சம்பவ

இடம் இருட்டு அதனால் எதிரிகள் பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் 4ம் வகுப்பு வரை படித்துள்ளேன். அரசு வழக்கில் என் வீட்டிற்கு முன்பு சம்பவம் நடந்ததாக காவல்துறையினர் தாக்கல் செய்துள்ளனர் என்றால் சரியல்ல. போலீசார் கேட்டதின் பேரில் திட்டமிட்டு ஒவ்வொரு எதிரியும் தனிதனியாக காயம் ஏற்படுத்தியதாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது புகாரிலும் முதல் விசாரணையிலும் எதிரிகள் வாள், அருவாள், கத்தியால் வெட்டியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாள், அருவாள், கத்தியால் தாக்கினால் பெருங்காயம் ஏற்படும் என்றால் சரிதான். ஆனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள காயச்சான்று சிறுகாயம் என உள்ளது என்றால் காயச்சான்று தவறு. எனது முதல் விசாரணையிலும் புகாரிலும் குற்றம் நடந்த பிறகு தான் எனது பெற்றோர் வந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் தனிநபர் சாட்சி இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் சாட்சிகளாக சேர்க்கப்பட்டுள்ள அ.சா.2 எனது அப்பா, அ.சா.3 எனது அம்மா. சாட்சி 4 சரண்யா எனது அன்னி. சாட்சி தவசெல்வம் எனது அக்கா பாண்டீஸ்வரியின் கணவர். நான் சம்பவ சமயத்தில் எதிரிகளை அடையாளம் காணமுடியாத இருட்டு அதனால் சூழ்நிலை சாட்சிகள் தான் எதிரிகளை சொல்லவேண்டும் என்றால் சரியல்ல. 1ம் எதிரியின் காணாமல் போனதாக சொல்லப்படும் இருசக்கரவாகனத்தின் பதிவெண் தெரியுமா என்றால் தெரியாது. 1ம் எதிரிக்கு எந்த இருசக்கரவாகனமும் சம்பவ சமயத்தில் இல்லை என்றால் எனக்கு தெரியாது. வழக்கில் நான் புகார் கொடுக்கவில்லை, 3 மருத்துவமனை சிகிச்சை ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை, எதிரிகளுக்கும் எங்களுக்கும் எந்த நிலப்பிரச்சனை இல்லை என்றால் சரியல்ல. குற்றச்சாட்டு சம்பவம் நடந்த இடம் இருட்டு என்பதால் ஆஜர் எதிரிகளை பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை

மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை

**S.C No.12/2022**

2024ம் ஆண்டு ஜனவரி மாதம் 5-ஆம் தேதி வெள்ளிக்கிழமை

**Crmp 10/2023** மனு அனுமதிக்கப்பட்டு அ.சா.2 மீண்டும் ஆஜராகி எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

அ.சா.2 (வேலு)

கு.வி (1 முதல் 4 எதிரிகள் தரப்பில்)

அ.சா.1 எனது மகன் என்றால் சரிதான். அ.சா.1ன் புகாரின் அடிப்படையில் தான் முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணையில் சரவணா மருத்துவமனையில் இருந்த போது தான் அ.சா.1 புகார் கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது மகனை சரவணா மருத்துவமனையில் 11.12.2020 காலை 9 மணிக்கு எனது மனைவி அனுமதித்ததாக எனது முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கின் முதல் தகவல் அறிக்கை 10.12.2020 23.30மணிக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது மகன் புகார் கொடுத்தது 11.12.2020 காலை 9 மணிக்கு மேல் சரவணா மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது கொடுத்தாக புகார் மனுவில் கண்டுள்ளது ஆனால் முதல் தகவல் அறிக்கையில் 10.12.2020 23.30 மணி என்று உள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கின் அசா.1 எனது மகன், அ.சா.3 எனது மனைவி, சாட்சி சரண்யா எனது மருமகள், சாட்சி தவசெல்வம் எனது மருமகன் என்றால் சரிதான். இந்த வழக்கில் பொதுமக்கள் யாரும் சாட்சியாக சாட்சிபட்டியலில் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் சாட்சி தவசெல்வம் தாலிகுளம் கிராமத்தில் வசிக்கிறார் என்றால் சரிதான், சம்பவத்தன்று எங்களுடன் இருந்தார். சம்பவதன்று தவசெல்வம் எங்களுடன் இருந்ததாக 161 வாக்குமூலத்திலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் நான் சொல்லியுள்ளேன். சம்பவத்திற்கு பிறகு போலீசார் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை, எனது மகனை விசாரித்தார்கள். அ.சா.1 எனது மகன் T.வேலாங்குளம் கழுங்கு அருகே எனது பெயரில் பட்டா உள்ளதாகவும் அது சம்பந்தமாக 1ம் எதிரிக்கும் இடையே

பிரச்சனை இருந்ததாக கூறியுள்ளார் என்றால் சரிதான். T.வேலாங்குளம் கழுங்கு இடத்தின் சர்வே எண் ஞாபகம் இல்லை. T.வேலாங்குளம் கழுங்கு அருகே எனக்கு சொந்த இடம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. உண்மையிலே இடம் இருந்திருந்தால் சர்வே எண் சொல்லியிருப்பீர்கள் என்றால் சரியல்ல. T.வேலாங்குளம் கழுங்கு அருகே 1ம் எதிரிக்கு சொந்த இடம் உள்ளது என்றால் சரிதான். அதன் சர்வெ எண் ஞாபகம் இல்லை. T.வேலாங்குளம் கழுங்கு அருகே 1ம் எதிரிக்கு சொந்தாக இடம் இல்லை என்றால் சரியல்ல. எனக்கும் 1ம் எதிரிக்கும் இடப்பிரச்சனை இல்லை வழக்கிற்காக இடப்பிரச்சனை இருப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையிலும் 161 வாக்குமூலத்திலும் எங்களுக்கும் 1ம் எதிரிக்கும் இடையே சுமார் 1மாத காலமாக இடப்பிரச்சனை இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். இடப்பிரச்சனை சம்பந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தீர்களா என்றால் புகார்கொடுக்கவில்லை. வழக்கிற்காக 1 மாதமாக இடப்பிரச்சனை இருந்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தின் முதல் விசாரணையில் எதிரிகள் அனைவருக்கும் எங்களுக்கும் இடப்பிரச்சனை இருப்பதாக சொன்னேன் என்றால சரிதான். டிசம்பர் மாதம் 10.12.2020 இரவு 8.30 மணி என்பது இருட்டாக இருக்கும் என்றால் சரியல்ல, இரண்டு பக்கமும் தெருவிளக்குகள் எரிந்துகொண்டு இருந்தது. என்னுடைய 161 வாக்குமூலத்திலும் முதல் விசாரணையிலும் சம்பவ இடத்தில் தெருவிளக்குகள் இருப்பதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. போலீசார் என்னை 161 மறுவிசாரணை செய்ததாக தாக்கல் செய்த வாக்குமூலத்திலும் சம்பவ இடம் இருட்டாக இருப்பதாக தெரிவித்துள்ளீர்கள் என்று சொன்னால் இல்லை. குற்றசம்பவம் எங்கள் இடத்திற்கு முன்பு நடந்ததா என்றால் எங்கள் வீட்டின் அருகே நடந்தது. எங்கள் வீட்டிலிருந்து மாரநாடு கால்வாய் 500அடி தூரம் இருக்குமா என்றால் சுமார் 50 அடி தூரம் தான் இருக்கும். அ.சா.1 தனது குறுக்கு விசாரணையின் போது சம்பவ இடம் மாரநாடு கால்வாய் அருகே சுடுகாடு அருகே என்ற சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. போலீசார் தாக்கல் செய்த வரைபடத்தில் சம்பவ இடம் எங்கள் வீட்டின் முன்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அரசு தரப்பில் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் எங்கள் வீட்டில் கழிப்பறை உள்ளது என குறிப்பிட்டுள்ளது என்றால் இல்லை. போலீசார் தவறுதலாக வரைபடம் தாக்கல் செய்துள்ளார்

என்று சொன்னால் சரியல்ல. எனது 161 வாக்குமூலத்திலும் முதல் விசாரணையிலும் சம்பவத்தின் போது எனது மகனுடன் நான் சென்றதாக எங்கும் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் எனது மகனின் அலறல் சத்தம் கேட்டு தான் போய்பார்த்தேன். என்னுடைய 161 மறுவிசாரணை வாக்குமூலத்தில் 5 நபர்கள் தாக்கியதாக தான் சொல்லப்பட்டது என்றால் சரிதான். ஆனால் குற்றவழக்கில் 4 எதிரிகள் மட்டும் தான் சேர்க்கபட்டுள்ளார்கள் மற்ற 1 நபர் அடையாளம் தெரியும், பெயர்தெரியாது என்பதால் சேர்க்கவில்லை. என்னுடைய மகனின் முதல் விசாரணையிலும் நீதிமன்ற குறுக்கு விசாரணையிலும் சம்பவம் நடந்து முடிந்த பிறகு நானும் என்னுடைய மனைவியும் சம்பவ இடத்திற்கு வந்ததாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. நான் தான் என்னுடைய மகனை 10.12.2020 இரவு 11.05 மணிக்கு சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்ததாக விபத்துபதிவேட்டில் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்தது 10.12.2020 இரவு 8.30 மணி என்றால் சரிதான். சம்பவம் நடந்து 2.35 மணி நேரம் தாமதமாக சென்று சிவகங்கை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டது என்றால் சரிதான். மேந்படி காலதாமத்திற்கான காரணம் 161 வாக்குமூலத்திலும் எனது முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சிவகங்கை அரசு மருத்துவமனையில் அனைத்து சிகிச்சைகளும் வழங்கப்படும் என்றால் சரிதான். எனது மகனை மதுரை அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பியதற்கு சிவகங்கை அரசு மருத்துவமனையில் பரிந்துரை கடிதம் கொடுத்தார்களா என்றால் பரிந்துரை கடிதம் கொடுத்தார்கள். பரிந்துரை கடிதத்தை நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மதுரை அரசு மருத்துவமனையில் எந்த தேதியில் எந்த நேரத்தில் சிகிச்சைக்கு சேர்த்தீர்கள் என்றால் 11.12.2020 இரவு 12 மணிக்கு சேர்த்தேன். மதுரை அரசு மருத்துவமனையில் சேர்த்ததற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் ஆவணங்களை போலீசாரிடம் கொடுத்துள்ளேன். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தீர்களா என்றால் தாக்கல் செய்திருப்பார்கள். மதுரை அரசு மருத்துவமனையிலிருந்து சிகிச்சைக்காக நானும் எனது மனைவியும் சேர்ந்து அழைத்து சென்று சரவணா மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம் என்றால் சரிதான். எனது மகனுக்கு சரவணா மருத்துவமனையில் சிறுகாயம் என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது மகனை சிகிச்சைக்கு சேர்த்த சரவணா

மருத்துவமனையில் 11.12.2020 காலை 9மணியிலிருந்து 12.12.2020 1நாள் மட்டும் சிகிச்சையில் இருந்ததாக காயச்சான்று உள்ளது என்றால் நாங்கள் 3 நாட்களாக உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தோம். எனது மகனை சிகிச்சையில் சேர்த்தபோது விபத்து பதிவேட்டில் எனது மகன் மதுஅருந்தியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனது மகனுக்கு எதிரிகளால் எந்த காயமும் ஏற்படவில்லை, எனது மகன் குடித்துவிட்டு இருசக்கர வாகனத்தில் சென்று கீழே விழுந்து சிறுகாயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் எதிரிகள் வாள், அருவாளால், கத்தி கொண்டு வெட்டினாரக்ள் என்று சொன்னேன் என்றால் சரிதான். வாளை கொண்டு கொடுங்காயம் தான் ஏற்படும் என்றால் சரிதான். எனது மகனின் காயச்சான்றிதழில் சிறுகாயம் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் சரவணா என்ற தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சோந்ததாக பொய்யான காயச்சான்று பெற்று பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகனை அரசு மருத்துவமனை சிவகங்கை மற்றும் மதுரை அரசு மருத்துவமனையிலிருந்தோ மேல்சிகிச்சைக்காக பரிந்துரை செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது மகனுக்கு எதிரிகளால் எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 சிகிச்சைக்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை